# திண்ணை பயிற்சிப்பட்டறை - தேனி

# TNPSC GROUP I, II, IIA, IV - 2023

**19th Batch**

**Test - 5**

Mobile: 93614 82208, 99409 70325 Email id: thinnaimail@gmail.com

## திண்ணை உறுதிமொழி

இரக்கமும் கருணையும் இருகண்களாகட்டும்!
இதழ்கள் இரண்டிலும் புன்னகை மலரட்டும்!
உழைப்பும், உறுதியும் இருதோள்களாகட்டும்!
நேர்மை ஒன்றையே நெஞ்சம் தாங்கட்டும்!
இடதும் வலதும் இணைந்த கரங்களாகட்டும்!
இதயம் என்றும் அன்பால் துடிக்கட்டும்!
தடைகளைத் தாண்டி கால்கள் ஓடட்டும்!
கொட்டும் வியர்வையே மூலதனமாகட்டும்!
சாதி, மதம் பேதம் ஒழிப்போம்!
பதவி பணம் தரும் கர்வம் தவிர்ப்போம்!
லட்சியம் விதைத்து வெற்றியை அடைந்து!
லஞ்சம் தவிர்த்து நெஞ்சை நிமிர்த்து!
அறத்தின் வழி நின்று மனிதம் போற்று!!

1. கூற்று 1: 1909 இல் மதராஸ் பிராமணரல்லாதோர் சங்கம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.
   கூற்று 2: 1912 இல் டாக்டர் சி.நடேசனார் எனும் மருத்துவர் மதராஸ் ஐக்கிய கழகம் எனும் அமைப்பை உருவாக்கினார்.
   A. 1,2 சரி B. 1 சரி 2 தவறு C. 1 தவறு 2 சரி D. 1,2 தவறு E. விடை தெரியவில்லை
2. காந்தியின் வேட்பாளரான பட்டாபி சீதாராமையா்யாவை வீழ்த்தி 1939 ஆம் ஆண்டு காங்கிரஸ் தலைவராக பதவிக்கு வந்தவர் யார்?
   A. திலகர் B. சுபாஷ் சந்திர போஸ் C. ஜவஹர்லால் நேரு D. மௌலானா அபுல் கலாம் ஆசாத்
   E. விடை தெரியவில்லை
3. கூற்று: நீதிக்கட்சியின் கீழிருந்த சட்டமன்றம் தான் முதன் முதலாக தேர்தல் அரசியலில் பெண்கள் பங்கேற்பதை 1921 ல் அங்கிகரித்தது.
   காரணம்: இத்தீர்மானம் பெண்களுக்கென இடத்தை ஏற்படுத்தியதால் 1925 இல் முத்துலட்சுமி அம்மையார் இந்தியாவின் முதல் பெண் சட்டமன்ற உறுப்பினராக முடிந்தது.
   A. கூற்று, காரணம் இரண்டும் சரி, சரியான விளக்கம்.
   B. கூற்று, காரணம் இரண்டும் தவறு, சரியான விளக்கமல்ல.
   C. கூற்று சரி, காரணம் தவறு.
   D. கூற்று தவறு, காரணம் சரி.
   E. விடை தெரியவில்லை
4. பிரிட்டிஷாருக்கு எதிராக தமிழர்களுக்கு சாதி, சமய, இன வேறுபாடுகளை கடந்து நிற்பதற்காக முதலில் விடுக்கப்பட்ட அறை கூவல் எது?
   A. வேலூர் கலகம் B. 1857-ம் ஆண்டு பேரறிக்கை
   C. 1801-ஆம் ஆண்டு பேரறிக்கை D. மருதுபாண்டியர்களின் கலகம் E. விடை தெரியவில்லை
5. களக்காடு போர் யாருக்கு இடையே நடைபெற்றது?
   A. யூசுப்கான் (ம) பூலித்தேவர் B. மாபூஸ்கான் (ம) பூலித்தேவர்
   C. கர்னல் ஹெரான் (ம) பூலித்தேவர் D. ஆற்காட்டு நவாப் (ம) பூலித்தேவர் E. விடை தெரியவில்லை
6. தமிழ்மொழியியல் தூய்மைவாதத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
   A. திரு.வி.க B. பி. சுந்தரனார் C. ஆபிரகாம் பண்டிதர் D. மறைமலை அடிகள்
   E. விடை தெரியவில்லை
7. பின்வரும் எந்த பேரரசில் பாளையக்காரர் முறை தொடர்ந்து நடைமுறையில் இருந்தது?
   A. நாயக்கர்கள் B. பல்லவர்கள் C. சோழர்கள் D. பாண்டியர்கள் E. விடை தெரியவில்லை
8. முடிசூடும் பெருமாள் என்ற இயற்பெயரைக் கொண்டவர் யார்?
   A. இராமலிங்க அடிகளார் B. ஸ்ரீ நாராயண குரு C. வைகுண்ட சுவாமிகள் D. அயோத்திதாசர்
   E. விடை தெரியவில்லை
9. கீழ்கண்ட கூற்றுகளுள் எவை பாளையக்காரர் முறை குறித்துச் சரியானவை?
   1. வாரங்கல்லைச் சார்ந்த பிரதாபருத்ரனின் ஆட்சிக் காலத்தில் காகதீய அரசில் இந்த முறை நடைமுறைப்படுத்தப்பட்டது.
   2. கிருஷ்ண தேவராயர் தமிழகத்தில் இம்முறையை அறிமுகப்படுத்தினார்.
   3. பரம்பரை பரம்பரையாக 72 பாளையக்காரர்கள் இருந்தனர்.

A. 1 (ம) 2 B. 2 (ம) 3 C. 1 (ம) 3 D. மேற்கண்ட அனைத்தும் E. விடை தெரியவில்லை

10. கீழ்கண்ட கூற்றுகளுள் எவை வள்ளலார் குறித்துச் சரியானவை?

1. அவர் ஏழைகளுக்கு உணவளிக்க வடலூரில் சத்திய ஞான சபையை நிறுவினார்.

2. அவர் தன்னைப் பின்பற்றுவோரை ஒருங்கிணைக்க சத்ய தர்ம சாலையை நிறுவினார்.

A. 1 மட்டும் B. 2 மட்டும் C. 1 (ம) 2 D. இவற்றில் எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

11. கீழ்கண்ட கூற்றுகளுள் எவை வேலூர் புரட்சி - 1806 குறித்துச் சரியானவை?

1. புரட்சி ஏற்படுவதற்கான இயக்க சக்தியாக தலைமை தளபதி சர் ஜான் கிரடாக் வெளியிட்ட புதிய இராணுவ விதிமுறை அமைந்தது.

2. கர்னல் மீக்கராஸ் என்பவர் முதலில் பலியானவர்.

3. கோட்டைக்கு வெளியேயிருந்த கர்னல் ஜில்லஸ்பி ஆற்காட்டில் இருந்த மேஜர் கூட்ஸ்க்கு கலகத்தைப் பற்றித் தகவல் கொடுத்தார்.

4. புரட்சிக்காரர்கள் ஃபதே ஹைதரை புதிய மன்னராகப் பிரகடனம் செய்து மைசூர் சுல்தானின் புலிக் கொடியை கோட்டையில் ஏற்றினார்.

A. 1 (ம) 3 B. 1, 2 (ம) 4 C. 2 (ம) 4 D. 1 (ம) 4 E. விடை தெரியவில்லை

12. கீழ்க்கண்ட கூற்றுகளுள் எவை வைகுண்ட சுவாமிகள் குறித்துச் சரியானவை?

1. இவர் விவிலியத்தைக் கற்றுக் கிறித்தவ இறையியலிலும் சிறந்து விளங்கினார்.

2. கடவுள் விஷ்ணு தம்மை மகனாகப் பாவித்து மறு பிறவி அளித்ததாக அறிவித்தார்.

3. அவருடைய போதனைகள் தொகுக்கப்பட்டு “அகிலத்திரட்டு” என்னும் வழிபாட்டு நூலாக வெளிவந்தது.

4. வைகுண்டசாமி “பூடம்” வழிபாட்டு முறையை கைவிடும்படி தன்னைப் பின்பற்றுவோரிடம் கூறினார்.

A. 2 (ம) 3 B. 2, 3 (ம) 4 C. 3 (ம) 4 D. மேற்கண்ட அனைத்தும் E. விடை தெரியவில்லை

13. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது காங்கிரஸ் வானொலியை திரைமறைவில் நிறுவியவர் யார்?

A. உஷா மேத்தா B. அருணா ஆசப் அலி C. ஜே.பி.கிருபாலனி D. ராமாநந்த் மிஷ்ரா

E. விடை தெரியவில்லை

14. தீரன் சின்னமலை பற்றிய சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. இவர் பிரெஞ்சு இராணுவத்தின் நவீன போர்முறை பயிற்சி பெற்றிருந்தார்.

2. ஜூன் 1801இல் இவர் “திருச்சிராப்பள்ளி பிரகடனம்” என்றழைக்கப்பட்ட “சுதந்திரப் பிரகடனம்” ஒன்றை வெளியிட்டார்.

3. இவர் காவேரி, ஓடாநிலை மற்றும் அரச்சலூர் போன்ற இடங்களில் நடைபெற்ற போர்களில் கொரில்லா போர் முறையில் ஆங்கிலப் படைகளைத் தோற்கடித்தார்.

A. 1 மட்டும் B. 2 மட்டும் C. 1 (ம) 3 D. மேற்கண்ட அனைத்தும் E. விடை தெரியவில்லை

15. வேலுநாச்சியார் பற்றிய சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. இந்தியாவில் பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்ட முதல் பெண்ணரசி வேலுநாச்சியார்.

2. அவர் பூலித்தேவரின் உதவியுடன் சிவகங்கையைக் கைப்பற்றி மீண்டும் இராணியாக முடிச்சூட்டிக் கொண்டார்.

A. 1 மட்டும் B. 2 மட்டும் C. 1 (ம) 2 D. இவற்றில் எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

16. 1529இல் பாளையக்காரர் முறையை ஏற்படுத்தியவர் யார்?

A. கோபால நாயக்கர் B. லெட்சுமி நாயக்கர் C. விஸ்வநாத நாயக்கர் D. பூஜை நாயக்கர்

E. விடை தெரியவில்லை

17. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. பெரியார் 1917இல் நீதிக்கட்சியில் சேர்க்கப்பட்டார்.

2. அவர் ஒத்துழையாமை இயக்கத்தை ஆதரித்தார் மற்றும் காதியை ஊக்குவித்தார்.

3. மதுவை தடை செய்வதற்கான பிரச்சாரத்தை ஆதரிப்பதற்காக அவர் தனது பண்ணையில் இருந்த 500 தேங்காய் மரங்களை வெட்டினார்.

A. 1 (ம) 2 B. 1 மட்டும் C. 2 (ம) 3 D. 3 மட்டும் E. விடை தெரியவில்லை

18. தீரன் சின்னமலை எங்கு கோட்டையைக் கட்டினார்?

A. சங்ககிரி B. கரூர் C. திண்டுக்கல் D. ஓடாநிலை E. விடை தெரியவில்லை

19. வேலூர் கலகத்திற்கான உடனடிக் காரணம் எது?

A. தாடி மற்றும் மீசையை மழித்து நேர்த்தியாக வைத்துக் கொள்ள சிப்பாய்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

B. ஆங்கிலேயர்கள் ஒரு புதிய தலைப்பாகையை அறிமுகப்படுத்தினர்.

C. ஆங்கிலேயர்கள் இந்திய சிப்பாய்களை தாழ்வாக நடத்தினர்.

D. சமய அடையாளத்தை நெற்றியில் அணிதல், தாதுகளில் வளையம் (கடுக்கண்) அணிதல் ஆகியன தடை செய்யப்பட்டன.

E. விடை தெரியவில்லை

20. சரியானவற்றைத் தேர்ந்தெடு: (நேரு அறிக்கை)

1. இந்தியாவுக்கு தன்னாட்சிப் பகுதி என்ற டொமினியன் தகுதி.

3. பொது வாக்களிப்பு முறையும் அடிப்படை உரிமைகளும் வழங்கப்படுவது.

A. 1 சரி 2 தவறு B. இரண்டும் தவறு C. இரண்டும் சரி D. 1 தவறு 2 சரி

E. விடை தெரியவில்லை

21. வேலூர் கலகத்தின் போது சென்னை மாகாண கவர்னராக இருந்தவர் யார்?

A. கானிங் பிரபு B. வில்லியம் பெண்டிக் பிரபு C. கர்சன் பிரபு D. லிட்டன் பிரபு

E. விடை தெரியவில்லை

22. ஜவஹர்லால் நேரு 1946-ல் இடைக்கால அரசை அமைத்த போது அதன் நிதி அமைச்சர் யார்?

A. சர்தார் வல்லபாய் படேல் B. முகமது அலி ஜின்னா C. சி. இராஜகோபாலச்சாரி

D. லியாகத் அலிகான் E. விடை தெரியவில்லை

23. கட்டபொம்மனின் எந்த இடத்தின் மீதான படையெடுப்பு ஆங்கிலேயர்கள் தங்கள் அதிகாரத்திற்கு விடப்பட்ட சவாலாகக் கருதினர்?

A. சிவகிரி B. சிவகங்கை C. இராமநாதபுரம் D. புதுக்கோட்டை E. விடை தெரியவில்லை

24. கீழ்கண்டவர்களுள் தென்னிந்திய புரட்சியின் போது (1800 - 1801) உருவாக்கப்பட்ட கூட்டமைப்பில் இருந்தவர்கள் யாவர்?

1. சிவகங்கையின் மருது சகோதரர்கள்
2. பாஞ்சாலங்குறிச்சியின் ஊமைத்துரை
3. திண்டுக்கல்லின் கோபால நாயக்கர்
4. மலபாரின் கேரளவர்மன்

A. 1 (ம) 2 B. 1, 2 (ம) 3 C. 1, 3 (ம) 4 D. மேற்கண்ட அனைத்தும் E. விடை தெரியவில்லை

25. நவாப் சந்தாசாகிப்பின் முகவர்களாக செயல்பட்டு வந்த மியானா, முடிமையா, நபீகான் கட்டாக் எனும் மூன்று பத்தானிய அதிகாரிகளுடன் நெருங்கிய நட்புறவை ஏற்படுத்தி கொண்டவர் யார்?

A. வேலு நாச்சியார் B. பூலித்தேவர் C. கட்டபொம்மன் D. மருது சகோதரர்கள்

E. விடை தெரியவில்லை

26. வேலுநாச்சியார் பற்றிய சரியான கூற்றுகளைத் தேர்ந்தெடு.

1. 1772-இல் ஆற்காட்டு நவாபும் லெப்டினன்ட் கர்னல் பான் ஜோர் தலைமையிலான கம்பெனி படைகளும் இணைந்து காளையார் கோவில் அரண்மணையை தாக்கினார்.

2. வேலுநாச்சியார் ஒரு படை பிரிவை உருவாக்கியதோடு கோபால நாயக்கர் மட்டுமல்லாமல் ஹைதர் அலியோடு கூட்டணி ஏற்படுத்திக் கொண்டார்.

3. கோபால நாயக்கர் மற்றும் ஹைதர் அலியின் இராணுவ உதவியோடு அவர் காளையார் கோவிலை கைப்பற்றினார்.

A. 1 (ம) 2 B. 2 (ம) 3 C. 1 (ம) 3 D. மேற்கண்ட அனைத்தும் E. விடை தெரியவில்லை

27. யார் அன்று நடைமுறையிலிருந்த இந்து சமய பழமைவாதத்தை கேள்விக்குள்ளாக்கினார்?

A. M. சிங்காரவேலர் B. மறைமலை அடிகள் C. இராமலிங்க அடிகள் D. ஆபிரகாம் பண்டிதர்

E. விடை தெரியவில்லை

28. வீரபாண்டிய கட்டபொம்மன் பற்றிய சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. அவர் கி.பி. 1790-ஆம் ஆண்டு பாளையக்காரர் ஆனார்.

2. தளபதி பானர்மேன் தலைமையில் பெரும்படை கட்டபொம்மனைத் தோற்கடிக்க அனுப்பப்பட்டது.

3. கி.பி. 1799 ஆம் ஆண்டு அக்டோபர் 16-ஆம் நாள் கயத்தாறு என்னுமிடத்தில் தூக்கிலிடப்பட்டார்.

4. அவர் ஆங்கிலேயர்களை எதிர்த்து முதலில் குரல் கொடுத்தவர்.

A. 2 (ம) 3 B. 1, 3 (ம) 4 C. 1, 2 (ம) 3 D. மேற்கண்ட அனைத்தும்

E. விடை தெரியவில்லை

29. பௌத்தத்திற்குப் புத்துயிரளித்த ஒரு தொடக்ககால முன்னோடியாக இருந்தவர் யார்?

A. பெரியார் ஈ.வெ. ராமசாமி B. சிங்காரவேலர் C. பரிதிமாற்கலைஞர் D. ஆபிரகாம் பண்டிதர்

E. விடை தெரியவில்லை

30. மதராஸ் பிராமணரல்லாதோர் சங்கம் எப்போது யாரால் நிறுவப்பட்டது?

A. 1909, சி.நடேசனார் B. 1909, பி. சுப்பிரமணியம் C. 1912, பிட்டி தியாகராயர்

D. 1909, டி.எம். நாயர் E. விடை தெரியவில்லை

31. கீழே கொடுக்கப்பட்டுள்ள பத்திரிக்கைகளில் எவை மறைமலை அடிகளால் ஆரம்பிக்கப்பட்டது?

1. அறிவுக்கடல் 2. சித்தாந்த தீபிகை 3. பகுத்தறிவு 4. தொழிலாளன்

A. 1 மட்டும் B. 1 (ம) 3 C. 1, 2 (ம) 4 D. 2 மட்டும் E. விடை தெரியவில்லை

32. புகழ்பெற்ற “வெள்ளையனே வெளியேறு இயக்க” போராட்டத்தை எந்த காங்கிரஸ் கமிட்டி முடிவு செய்தது?

A. மதராஸ் B. லாகூர் C. பம்பாய் D. கல்கத்தா E. விடை தெரியவில்லை

33. பின்வருவனவற்றுள் எவை சுயமரியாதை இயக்கம் உருவாகக் காரணமாக இருந்தது?

1. எழுத்தறிவின்மை 2. மூடநம்பிக்கைகள்

3. பாகுபாடற்ற சமூகம் 4. பெண்களின் தாழ்வான நிலை

A. 1 (ம) 2 B. 2, 3 (ம) 4 C. 3 (ம) 4 D. 1, 2 (ம) 4 E. விடை தெரியவில்லை

34. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. 1916 நவம்பர் 20இல் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் பிராமணர் அல்லாத தலைவர்களால் உருவாக்கப்பட்டது.

2. 1916 டிசம்பரில் பிராமணரல்லாதோர் அறிக்கை டி.எம். மாதவராவால் வெளியிடப்பட்டது.

A. 1 மட்டும் B. 2 மட்டும் C. 1 (ம) 2 D. இவற்றில் எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

35. பொருத்துக.

a. வீரபாண்டிய கட்டபொம்மன் - 1. பாஞ்சாலங்குறிச்சி

b. வேலுநாச்சியார் - 2. நெற்கட்டும்செவல்

c. புலித்தேவர் - 3. சிவகங்கை

d. தீரன் சின்னமலை - 4. கொங்கு நாடு

A. 1 2 3 4 B. 2 1 4 3 C. 2 1 3 4 D. 1 3 2 4 E. விடை தெரியவில்லை

36. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. பெரியார் 1918 - 1919 காலப்பகுதியில் நகராட்சி ஆணையர் போன்ற உத்தியோக பூர்வ பதவியை வகித்தார்.

2. அவர் சில காலம் குடும்பத் தொழிலான வணிகத்தை கவனித்து ஒரு பிரபலமான ஆளுமை ஆனார்.

A. 1 மட்டும் B. 2 மட்டும் C. 1 (ம) 2 D. இவற்றில் எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

37. சேரன்மாதேவி குருகுலப் பள்ளி எந்த காங்கிரஸ் தலைவரால் நடத்தப்பட்டது?

A. பெரியார் ஈ.வெ. ராமசாமி B. டாக்டர்.சி. நடேசனார்

C. வ.வே. சுப்பிரமணியம் D. டி.எம். நாயர் E. விடை தெரியவில்லை

38. எந்த அமைப்பு மேற்கொண்ட முயற்சிகளால் சித்தரவதை ஆணையம் நிறுவப்பட்டது?

A. சென்னைவாசிகள் சங்கம் B. சென்னை மகாஜன சபை C. இந்திய தேசிய காங்கிரஸ்

D. தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் E. விடை தெரியவில்லை

39. ஒடுக்கப்பட்ட மக்களின் கூட்டமைப்பின் தலைவராக பணியாற்றியவர் யார்?

A. இரட்டைமலை சீனிவாசன் B. Dr.B.R. அம்பேத்கர் C. E.V. ராமசாமி D. M.C. ராஜா

E. விடை தெரியவில்லை

40. ஜீவிய சரித சுருக்கம் என்னும் சுயசரிதை யாருடையது, எப்போது வெளியிடப்பட்டது?

A. எம்.சி. ராஜா, 1929 B. இரட்டைமலை சீனிவாசன், 1939 C. எம். சிங்காரவேலர், 1939

D. ஈ.வெ. ராமசாமி, 1949 E. விடை தெரியவில்லை

41. ஆதிதிராவிட மகாஜன சபை எப்போது நிறுவப்பட்டது?

A. 1983 B. 1873 C. 1893 D. 1923 E. விடை தெரியவில்லை

42. 1920 ஜூன் இல் எங்கு கிலாபத் குழுவின் கூட்டம் நடந்தது?

A. பம்பாய் B. கல்கத்தா C. அலகாபாத் D. டெல்லி E. விடை தெரியவில்லை

43. வ.உ.சி. யால் வாங்கப்பட்ட காலியா மற்றும் லாவோ எந்த இரு இடங்களுக்கிடையே ஓடியது?

A. தூத்துக்குடி மற்றும் கொழும்பு B. தூத்துக்குடி மற்றும் மாலத்தீவு

C. இலங்கை மற்றும் மாலத்தீவு D. மதராஸ் மற்றும் இலங்கை

E. விடை தெரியவில்லை

*திண்ணை பயிற்சிப் பட்டறை, 57A, ஜவகர் மெயின்ரோடு, N.R.T. நகர், தேனி.* 99409 70325 Thinnai competitive Exam YouTube Thinnai Theni

44. “உங்கள் மாவட்டங்களுக்கு செல்லுங்கள் கதர், இந்து - முஸ்லீம் ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு ஆகியன பற்றிய செய்திகளை பரப்புங்கள் இளைஞர்களை ஒன்று திரட்டி அவர்களை சுயராஜ்யத்தின் உண்மையான வீரர்களாக உருமாற்றுங்கள்” என்று காங்கிரசாருக்கு அறிவுறுத்தியவர் யார்?

A. பெரியார் B. காமராஜர் C. காந்தி D. சத்தியமூர்த்தி E. விடை தெரியவில்லை

45. பின்வருவனவற்றுள் ஆங்கில நிலவருவாய் முறையின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டது எது?

A. சுரங்கம் B. குடிசைத் தொழில்கள் C. வேளாண்மை D. மேற்கண்ட அனைத்தும்

E. விடை தெரியவில்லை

46. பிரிட்டிஷ் அரசாங்கத்தால் அவுரி ஆணையம் எப்போது அமைக்கப்பட்டது?

A. 1862 B. 1860 C. 1865 D. 1861 E. விடை தெரியவில்லை

47. இராபர்ட் கிளைவ் வங்காளத்தின் வரி வசூலிக்கும் உரிமையை பெற்ற ஆண்டு?

A. 1773 B. 1752 C. 1765 D. 1793 E. விடை தெரியவில்லை

48. 1922 ஆம் ஆண்டு எங்கு வரிகொடா இயக்க பிரச்சாரத்தை காந்தியடிகள் அறிவித்தார்?

A. ஆந்திரா B. பர்தோலி C. தெலுங்கானா D. உத்தரப் பிரதேசம் E. விடை தெரியவில்லை

49. மக்கள் இயக்கங்களுக்குப் பதிலாக தனிநபர் சத்தியாகிரகத்தை தொடங்க காந்தி முடிவு செய்தது ஏன்?

A. தேசியவாதிகளின் பொறுமை பலவீனத்தின் காரணமாக இல்லை.

B. காங்கிரஸின் கோரிக்கைகளை அமைதியாக ஏற்றுக்கொள்ள அரசிற்கு மற்றொரு வாய்ப்பை வழங்குவதற்காக.

C. சர்வாதிகாரத்திற்கு எதிரான போரை வலுவிழக்கச் செய்யாமலிருக்க.

D. இவற்றில் எதுவுமில்லை.

E. விடை தெரியவில்லை

50. யாருடைய அறிவுரையின்படி, அரசியலில் ஈடுபடும் முன் நாட்டின் அனைத்து பகுதிகளுக்கும் காந்தியடிகள் பயணம் மேற்கொண்டார்?

A. கோகலே B. திலகர் C. இராஜாஜி D. படேல் E. விடை தெரியவில்லை

51. தீன்காதியா முறையின் படி, இந்திய விவசாயிகள் தங்களின் நிலத்தின் எத்தனை பங்கு பகுதியில் அவுரி பயிரிட வேண்டும் என்று ஐரோப்பிய பண்ணையாளர்கள் அவர்களை கட்டாயப்படுத்தினர்?

A. 2/20 B. 3/30 C. 2/30 D. 3/20 E. விடை தெரியவில்லை

52. தயானந்த சரஸ்வதி பற்றிய சரியான கூற்றுகளைத் தேர்ந்தெடு.

1. 1875 ஆம் ஆண்டு அவர் ஆரிய சமாஜத்தை நிறுவினார் மற்றும் அவரின் முக்கிய நூலான சத்யார்த்த பிரகாஷ் என்ற நூலை வெளியிட்டார்.

2. அவர் “வேதங்களை நோக்கித் திரும்புக” என்று அழைப்புவிடுத்தார்.

3. அவர் புராணங்கள், பலதெய்வ வழிபாடு, உருவ வழிபாடு, பிராமண அர்ச்சகர்களின் நடவடிக்கைகள் ஆகியவற்றை ஏற்றுக்கொண்டார்.

A. 1 (ம) 2 B. 2 (ம) 3 C. 1 (ம) 3 D. மேற்கண்ட அனைத்தும் E. விடை தெரியவில்லை

53. 1856ல் விதவை மறுமணம் சட்டம் யாருடைய முயற்சியால் நிறைவேற்றப்பட்டது?

A. கேசவ சந்திர சென் B. ஈஸ்வர சந்திர வித்யாசாகர் C. ராஜா ராம்மோகன் ராய்

D. டாக்டா முத்துலட்சுமி அம்மையார் E. விடை தெரியவில்லை

54. காந்தியடிகளை சம்பரானுக்கு வருகை புரியுமாறு கேட்டுக் கொண்டவர் யார்?

A. ராஜாஜி B. படேல் C. ராஜ்குமார் சுக்லா D. கோகலே E. விடை தெரியவில்லை

55. காலவரிசைப்படுத்துக.

1. சம்பரான் சத்தியாகிரகம் 2. கேதா சத்தியாகிரகம் 3. அகமதாபாத் ஆலை தொழிலாளர்கள் போராட்டம்

A. 1 2 3 B. 1 3 2 C. 2 1 3 D. 2 3 1 E. விடை தெரியவில்லை

56. பூனா ஒப்பந்தம் தொடர்பான சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. 1932ம் ஆண்டு காந்திக்கும் டாக்டர் அம்பேத்கருக்கும் இடையேயான ஒப்பந்தம்.

2. இதன்படி, பல்வேறு மாகாண சட்டமன்றங்களில் 148 இடங்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கப்பட்டது.

A. 1 மட்டும் B. 2 மட்டும் C. 1 (ம) 2 D. இவற்றில் எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

57. பின்வருவனவற்றைக் காலவரிசைப்படுத்துக.

1. நீதிக்கட்சி 2. தென்னிந்திய நல உரிமைச் சங்கம்

3. சுயமரியாதை இயக்கம் 4. திராவிடர் கழகத்தின் தோற்றம்

A. 3 1 2 4 B. 3 2 1 4 C. 4 1 2 3 D. 4 2 1 3 E. விடை தெரியவில்லை

58. பின்வருவனவற்றில் கர்னல் ஜில்லஸ்பி தொடர்புடைய தென்னிந்திய கிளர்ச்சி எது?

A. தீரன் சின்னமலையின் தோல்வி B. பாளையக்காரர்களின் புரட்சியை அடக்கியது

C. வேலூர் கலகம், 1806 D. வேலு நாச்சியாரை சிறைப்படுத்துதல்

E. விடை தெரியவில்லை

59. பாகிஸ்தானை உருவாக்கும் எண்ணத்தை வெளிப்படுத்திய கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக மாணவர் யார்?

A. ரஹ்மத் அலி B. ஜின்னா C. முகமது இக்பால் D. மதன் மோகன் மாளவியா

E. விடை தெரியவில்லை

60. ரௌலட் சட்டத்தை எதிர்த்து காந்தியடிகள் நாடு தழுவிய சத்தியாகிரக போராட்டத்துக்கு எப்போது அழைப்பு விடுத்தார்?

A. 6 ஏப்ரல் 1919 B. 9 ஏப்ரல் 1919 C. 13 ஏப்ரல் 1919 D. 23 ஏப்ரல் 1919

E. விடை தெரியவில்லை

61. ரௌலட் சத்தியாகிரகத்தின் போது அமிர்தசரஸில் கைது செய்யப்பட்ட தலைவர்கள் யார்?

1. சைஃபுதீன் கிச்லு 2. சத்யபால் 3. காந்தியடிகள்

A. 1 (ம) 2 B. 1 (ம) 3 C. 2 (ம) 3 D. மேற்கண்ட அனைத்தும் E. விடை தெரியவில்லை

62. ஒத்துழையாமை இயக்கத்தின் போது தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்தவர் யார்?

A. ஈ.வெ.ராமசாமி B. காமராசர் C. சி. ராஜகோபாலச்சாரி D. எஸ். சத்தியமூர்த்தி

E. விடை தெரியவில்லை

63. 1915-ல் "How India wrought for Freedom" என்ற புத்தகத்தை வெளியிட்டவர் யார்?

A. அன்னி பெசண்ட் B. மௌலானா அபுல்கலாம் ஆசாத் C. வ.உ. சிதம்பரனார்

D. ஜார்ஜ் அருண்டேல் E. விடை தெரியவில்லை

64. கிரிப்ஸ் தூதுக்குழு பற்றிய சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. போருக்கு பிறகு தன்னாட்சி வழங்குவது.

2. பாகிஸ்தான் உருவாக்க கோரிக்கையை ஏற்கும் விதமாக இந்திய இளவரசர்கள் பிரிட்டிஷாருடன் தனி ஒப்பந்தத்தை கையெழுத்திடலாம்.

3. போரின் போது பாதுகாப்புத்துறை பிரிட்டிஷாரின் கட்டுப்பாட்டில் இருப்பது.

A. 1 (ம) 2 B. 1 (ம) 3 C. 2 (ம) 3 D. 1, 2 (ம) 3 E. விடை தெரியவில்லை

65. "சுயராஜ்ஜியம் என்பது முழுமையான தன்னாட்சி மற்றும் அந்நிய ஆட்சியில் இருந்து முழுமையான விடுதலை பெறுவதாகும் எனக் கூறியவர்

A. நேரு B. தாதாபாய் நௌரோஜி C. அன்னிபெசன்ட் D. திலகர் E. விடை தெரியவில்லை

66. ஐரோப்பியர்கள் இந்தியாவின் ஏராளமான செல்வத்தைப் பற்றி யாருடைய பயணக் குறிப்புகளிலிருந்து அறிந்து கொண்டார்?

A. இபன் பதூதா B. நிக்கோலே டி கோண்டி C. மார்க்கோபோலோ D. அப்துல் ரசாக்

E. விடை தெரியவில்லை

67. எந்த தேசிய முழக்கங்களை முன்மொழிந்த சௌகத் அலியின் யோசனையை காந்தியடிகள் ஆதரித்தார்?

1. அல்லாஹு அக்பர் 2. வந்தே மாதரம் 3. இந்து - முஸ்லீம் வாழ்க

A. 1 (ம) 2 B. 1 (ம) 3 C. 2 (ம) 3 D. 1, 2 (ம) 3 E. விடை தெரியவில்லை

68. பின்வருவனவற்றில் மேற்கு பாளையப் பகுதிகளுள் அல்லாதது எது?

A. சிங்கம்பட்டி B. பாஞ்சாலங்குறிச்சி C. தலைவன்கோட்டை D. நடுவக்குறிச்சி

E. விடை தெரியவில்லை

69. ஒத்துழையாமை இயக்கத்துக்கு அனுமதி வழங்கிய இந்திய தேசிய காங்கிரஸின் அமர்வு எது?

A. நாக்பூர் B. கல்கத்தா C. மதராஸ் D. லாகூர் E. விடை தெரியவில்லை

70. மருது சகோதரர்கள் பற்றிய சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. சிவகங்கை மருது சகோதரர்களால் மீண்டும் கைப்பற்றப்பட்டு பெரிய மருது அரசராக பொறுப்பேற்றார்.

2. பெரியமருது "சிவகங்கை சிங்கம்" என அழைக்கப்பட்டார்.

A. 1 மட்டும் B. 2 மட்டும் C. 1 (ம) 2 D. இவற்றில் எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

71. கோவா பகுதியில் குழந்தை திருமணம் மற்றும் உடன்கட்டை ஏறும் வழக்கம் ஆகியவற்றை ஒழித்த போர்த்துக்கீசிய ஆளுநர் யார்?

A. வாஸ்கோடா காமா B. பிரான்சிஸிஸ்கோ டி அல்மைடா C. அல்போன்ஸோ டி அல்புகர்க்

D. டியூரேட் - டி - மெனிஸிஸ் E. விடை தெரியவில்லை

72. 1919ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தில்லியில் நடைபெற்ற அகில இந்திய கிலாபத் மாநாட்டிற்கு தலைமையேற்றவர் யார்?

A. ஜவஹர்லால் நேரு B. மௌலானா முகமது அலி C. காந்தி

D. மௌலானா அபுல் கலாம் ஆசாத் E. விடை தெரியவில்லை

73. சைமன் குழுவை புறக்கணிக்க பின்வரும் எந்த காங்கிரஸ் வருடாந்திர மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது?

A. லாகூர் B. கல்கத்தா C. மதராஸ் D. பம்பாய் E. விடை தெரியவில்லை

74. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

1. 1918இல் இந்தியாவின் முதல் தொழில் சங்கமான சென்னை தொழிலாளர் சங்கம் உருவாக்கப்பட்டது.

2. அகில இந்திய தொழிலாளர் சங்கத்தின் முதல் மாநாடு 1920 அக்டோபர் 31இல் நடைபெற்றது.

A. 1 மட்டும் B. 2 மட்டும் C. 1 (ம) 2 D. இவற்றில் எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

75. யாருடைய கை போரில் துண்டிக்கப்பட்டு, ஆனால் அவர் எதிரியின் கோட்டையில் தான் நுழைந்து பல தலைகளைக் கொய்தமைக்காகத் தமக்கு கிடைத்தப் பரிசு என்றும் கூறியவர்?

A. பூலித்தேவர் B. சின்னமருது C. சின்னமலை D. ஒண்டிவீரன் E. விடை தெரியவில்லை

76. ஒருவர் ரூ.25000 ஐ, 4% கூட்டுவட்டிவீதத்தில் முதலீடு செய்து n-ஆண்டுகளில் ரூ.27040 ஐப் பெற்றால், n-இன் மதிப்பு

A. 2 B. 3 C. 2½ D. 3½ E. விடை தெரியவில்லை

77. அரையாண்டுக்கு ஒருமுறை கூட்டுவட்டி கணக்கிடும் முறையில், ரூ.5000 அசலுக்கு, 16% வட்டிவீதத்தில், 1 ஆண்டு முடிவில் கிடைக்கும் கூட்டுவட்டியின் மதிப்பு

A. ரூ.832 B. ரூ.382 C. ரூ.283 D. ரூ.823 E. விடை தெரியவில்லை

78. ரூ.16000க்கு, 20% கூட்டுவட்டிவீதத்தில், காலாண்டுக்கு ஒருமுறை வட்டி கணக்கிடும் முறையில், 9 மாதங்களுக்கான கூட்டுவட்டி

A. ரூ.18522 B. ரூ.17640 C. ரூ.16800 D. ரூ.2522 E. விடை தெரியவில்லை

79. ரூ. 10000 அசலுக்கு, 9% வட்டிவீதத்தில், 3 ஆண்டுகள் முடிவில் கிடைக்கும் மொத்தத்தொகை

A. ரூ. 12500 B. ரூ. 11800 C. ரூ. 12700 D. ரூ. 12000 E. விடை தெரியவில்லை

80. ஒரு குறிப்பிட்ட தொகைக்கு, 4% தனிவட்டிவீதத்தில், 4 ஆண்டுகளுக்கான தனிவட்டியானது, அதே தொகைக்கு 5% தனிவட்டிவீதத்தில் 3 ஆண்டுகளுக்கான தனிவட்டியை விட ரூ. 80 அதிகம் எனில், அசலின் மதிப்பு

A. ரூ. 6000 B. ரூ. 7200 C. ரூ. 8000 D. ரூ. 10000 E. விடை தெரியவில்லை

81. ஒரு கன சதுரத்தின் கனஅளவு 729 செ.மீ$^3$ எனில் அதன் மூலைவிட்டம் எவ்வளவு?

A. $9\sqrt{2}$ செ.மீ B. $9\sqrt{3}$ செ.மீ C. 18 செ.மீ D. $18\sqrt{3}$ செ.மீ

E. விடை தெரியவில்லை

82. 3 மீ x 2 மீ x 1 மீ அளவுகள் கொண்ட கனசெவ்வக நீர்த்தொட்டியின் கனஅளவு லிட்டரில்

A. 6 லிட்டர் B. 5 லிட்டர் C. 6000 லிட்டர் D. 5000 லிட்டர்

E. விடை தெரியவில்லை

83. ஒரு திண்ம அரைக்கோளத்தில் மொத்த புறப்பரப்பு $675\pi$ ச.செ.மீ எனில் அதன் வளைபரப்பு

A. $225\pi$ ச.செ.மீ B. $450\pi$ ச.செ.மீ C. 450 ச.செ.மீ D. 225 ச.செ.மீ

E. விடை தெரியவில்லை

84. ஒரு சர்க்கஸ் கூடாரமானது உருளையின் மீது கூம்பு இணைந்த வடிவில் அமைந்துள்ளது. கூடாரத்தின் மொத்த உயரம் 49 மீ அதன் அடிப்பக்கத்தின் விட்டம் 42 மீ. உருளைப்பாகத்தின் உயரம் 21 மீ மேலும் 1 சமீ கித்தான் துணியின் விலை ரூ. 12.50 எனில் கூடாரம் அமைக்கத் தேவையான கித்தான் துணியின் விலையகைக் காண்க.

A. ரூ. 63552 B. ரூ. 65352 C. ரூ. 63525 D. ரூ. 65532 E. விடை தெரியவில்லை

85. ஒரு செவ்வகத்தின் ஒவ்வொரு பக்கமும் இரு மடங்காகும் போது அதனுடைய பரப்பளவு .................... மடங்காகும்.

A. 2 B. 3 C. 4 D. 6 E. விடை தெரியவில்லை

86. A என்பவர் ஒரு வேலையில் ¼ பகுதியை 20 நாட்களில் செய்து முடிப்பர் எனில், அதே வேலையின் ¾ பகுதியை A செய்து முடிக்க ஆகும் நாட்கள்

A. 10 B. 20 C. 30 D. 60 E. விடை தெரியவில்லை

87. A மற்றும் B ஆகிய இருவரும் இணைந்து ஒரு வேலையை 16 நாட்களில் முடிப்பர். A தனியே அந்த வேலையை 48 நாட்களில் முடிப்பர் எனில், B தனியாக அந்த வேலையை முடிக்க ஆகும் நாட்கள்

A. 25 B. 24 C. 22 D. 20 E. விடை தெரியவில்லை

88. A என்பவர் தனியே ஒரு வேலையை 35 நாட்களில் முடிப்பர். B ஆனவர் A ஐ விட 40% கூடுதல் திறன் வாய்ந்தவர் எனில், B அந்த வேலையை முடிக்க ஆகும் நாட்கள்

A. 20 B. 25 C. 28 D. 30 E. விடை தெரியவில்லை

89. ஒரு வேலையை A, B முறையே 20, 25 நாட்களில் செய்து முடிப்பர். இருவரும் சேர்ந்து அந்த வேலையைச் செய்து ரூ.3600 ஐ ஊதியமாகப் பெற்றால், A-இன் பங்கு

A. ரூ.1600 B. ரூ.1800 C. ரூ.2000 D. ரூ.2400 E. விடை தெரியவில்லை

90. ஒரு வேலையை A, B - 6, 8 நாட்களில் முடிப்பர். அவர்கள் இருவரும் C இன் உதவியோடு அந்த வேலையை 3 நாட்களில் முடித்து ரூ.3200 ஐ ஊதியமாகப் பெற்றால், C யின் பங்கு

A. ரூ.400 B. ரூ.800 C. ரூ.1200 D. ரூ.1600 E. விடை தெரியவில்லை

91. ஒரு வகுப்பிலுள்ள 35 மாணவர்களில், 7 மாணவர்கள் வருகை தரவில்லையெனில், வருகை தராத மாணவர்களின் %

A. 10% B. 20% C. 30% D. 40% E. விடை தெரியவில்லை

92. தேர்வில் தேர்ச்சி பெற ஒரு மாணவன் 33% மதிப்பெண்கள் பெற வேண்டும். அவன் 125 மதிப்பெண்கள் பெற்று, 40 மதிப்பெண்கள் குறைவினால் தேர்வில் தோல்வியடைந்தான் எனில், அவன் எழுதிய தேர்வின் மொத்த மதிப்பெண்கள்

A. 300 B. 400 C. 500 D. 600 E. விடை தெரியவில்லை

93. ஓர் எண்ணில் 10% குறைக்கப்பட்டு, பின் 10% அதிகரிக்கப்படுகிறது. அவ்வாறு பெறப்பட்ட எண், கொடுக்கப்பட்ட எண்ணை விட 10 குறைவு எனில், கொடுக்கப்பட்ட எண்ணின் மதிப்பு

A. 2000 B. 1500 C. 1050 D. 1000 E. விடை தெரியவில்லை

94. ஒருவர் தம் வருமானத்தில் 40% உணவுக்காகவும், 15% உடைக்காகவும், 20% வீட்டு வாடகைக்காகவும் செலவிடுகின்றார், மீதியைச் சேமிக்கின்றார். அவர் வருமானம் 34,400 எனில் அவர் எவ்வளவு சேமிக்கின்றார்,

A. ரூ.7,300 B. ரூ. 8,600 C. ரூ. 8,300 D. ரூ.7,900 E. விடை தெரியவில்லை

95. ஒரு மாணவன் ஓர் எண்ணை 5/3 ஆல் பெருக்குவதற்குப் பதிலாக 3/5 ஆல் பெருக்கிவிட்டால், உண்டாகும் சதவீதப்பிழை

A. 34% B. 44% C. 54% D. 64% E. விடை தெரியவில்லை

96. ஒரு குறிப்பிட்ட தனிவட்டி வீதத்தில் 3 ஆண்டுகளில் ரூ. 1000 ஆனது, ரூ. 1150 ஆக மாறுகிறது. வட்டிவீதம் 3% கூடுதலாக இருப்பின், அதன் தற்போதைய மொத்த மதிப்பு

A. ரூ. 1400 B. ரூ. 1300 C. ரூ. 1140 D. ரூ. 1240 E. விடை தெரியவில்லை

97. உருளை மற்றும் கூம்பின் அடிப்பக்க ஆரங்களின் விகிதங்கள் முறையே 3 : 5 மற்றும் அவற்றின் உயரத்தின் விகிதங்கள் முறையே 5 : 3. அவற்றின் கனஅளவுகளின் விகிதம்?

A. 3 : 5 B. 4 : 9 C. 9 : 16 D. 9 : 5 E. விடை தெரியவில்லை

98. 45 செ.மீ உயரமுள்ள ஓர் இடைக் கண்டத்தின் இரு புற ஆரங்கள் முறையே 28 செ.மீ மற்றும் 7 செ.மீ எனில், இடைக்கண்டத்தின் கனஅளவைக் காண்க.

A. 48510 செ.மீ$^3$ B. 48501 செ.மீ$^3$ C. 48105 செ.மீ$^3$ D. 48511 செ.மீ$^3$

E. விடை தெரியவில்லை

99. பக்க அளவு 24செ.மீ உடைய ஒரு கனசதுரத்தின் புறப்பரப்பு மற்றும் மொத்தப் பரப்பு என்பது முறையே

A. 3456 செ.மீ$^2$, 2304 செ.மீ$^2$ B. 4302 செ.மீ$^2$, 6534 செ.மீ$^2$ C. 2340 செ.மீ$^2$, 5634 செ.மீ$^2$

D. 2304 செ.மீ$^2$, 3456 செ.மீ$^2$ E. விடை தெரியவில்லை

100. ஒரு நகரத்தில் வசிப்பவர்களில் 60% அரிசி சாப்பிடுபவர்கள், 50% கோதுமை சாப்பிடுபவர்கள், 20% இரண்டையும் சாப்பிடுபவர்கள் எனில், இந்த இரண்டையும் சாப்பிடாதவர்களின் %

A. 15% B. 10% C. 12% D. 8% E. விடை தெரியவில்லை

திண்ணை

# 19th Batch

## Answer Key - Test 5

| S.No | Ans | S.No | Ans | S.No | Ans | S.No | Ans | S.No | Ans |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 21 | B | 41 | C | 61 | A | 81 | B |
| 2 | B | 22 | D | 42 | C | 62 | A | 82 | C |
| 3 | C | 23 | A | 43 | A | 63 | A | 83 | B |
| 4 | C | 24 | C | 44 | C | 64 | D | 84 | C |
| 5 | B | 25 | B | 45 | C | 65 | D | 85 | C |
| 6 | D | 26 | D | 46 | B | 66 | C | 86 | D |
| 7 | A | 27 | C | 47 | C | 67 | D | 87 | B |
| 8 | C | 28 | C | 48 | B | 68 | B | 88 | B |
| 9 | C | 29 | B | 49 | C | 69 | B | 89 | C |
| 10 | D | 30 | B | 50 | A | 70 | A | 90 | A |
| 11 | D | 31 | A | 51 | D | 71 | C | 91 | B |
| 12 | D | 32 | C | 52 | A | 72 | C | 92 | C |
| 13 | A | 33 | D | 53 | B | 73 | C | 93 | D |
| 14 | C | 34 | A | 54 | C | 74 | C | 94 | B |
| 15 | A | 35 | D | 55 | B | 75 | D | 95 | D |
| 16 | C | 36 | D | 56 | C | 76 | A | 96 | D |
| 17 | D | 37 | C | 57 | D | 77 | A | 97 | D |
| 18 | D | 38 | A | 58 | C | 78 | D | 98 | A |
| 19 | B | 39 | A | 59 | A | 79 | C | 99 | D |
| 20 | C | 40 | B | 60 | A | 80 | C | 100 | B |